5. கவனஈர்ப்பு.

(அ) உளுந்தூர்ப்பேட்டைத் தொகுதி, விருகாவூர் மற்றும் சுற்றிய கிராமங்களில், கோமுகி நதியில் கிளை வாய்க்காலில் தண்ணீர் வராததால், விவசாயிகள் பாதிப்பு குறித்து.

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதியைச் சேர்ந்த விருகாவூர், மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயத்திற்கு கோமுகிநதியில் கிளை வாய்க்கால் மூலம் தண்ணீர் வருவது கடந்த புயல் வெள்ளம் காரணமாக அறவே நின்றுவிட்டதால் அப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்பெற்றிருக்கும் நிலை குறித்து, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, விருகாவூர் அணை கோமுகி நதியின் குறுக்கே கோமுகி நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள ஒன்பதாவது அணையாகும். அணையிலிருந்து இடது புறம் 1.5 கி.மீ. நீளம் ஒரு கால்வாய் செல்கிறது. இக்கால்வாயின் கீழ், விருகாவூர் கிராம எல்லையில் உள்ள 142.01 ஏக்கர் நிலங்கள் நேரடி நீர்ப்பாசனம் பெறுகின்றன. 1977ஆம் ஆண்டு நவம்பர் மாத புயல் மற்றும் வெள்ளத்தினுல் இக்கால்வாயின் கரை சுமார் 40 மீட்டர் தூரத்திற்கு பாதிக்கப்பட்டு வண்டல் படிந்து தூர்ந்துவிட்டது. எனினும், இதனுல் இயல்பான நீர் வரத்து பாதிக்கப்படவில்லை. தற்சமயம் ஆற்றில் தண்ணீர் வரத்து ஏதுமில்லை. தேவையான மராமத்து மதிப்பீடு ரூபாய் 3,000-க்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பணி தற்போது துரிதமாக நடந்து வருகிறது. இது இம்மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

(முற்பகல் 10-40.)

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, இன்னும் அதிக சேதமாகாமல் அந்த வாய்க்காலை ஆழப்படுத்தி, கரையைப் பலப்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசு அதை பரிசீலிக்கும்.